1981 பிப்ரவரி 10]

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கைத்தறி சங்கத்தினுடைய அமைப்புகள் எல்லாம் 3 மாதங்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதில் பல கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று அந்த மாநில அமைப்பு வெளியிட்டிருந்தது. அது உண்மையா? ஆம் என்றால், அந்தத் துணிகளை ஏன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்

திரு. எஸ். என். இராசேந்திரன் : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பெறும் துணிகள் 3 மாதங்களாக தேக்கம் அதிகமாக ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். என்னிடத்தில் கொடுக்கப்பெற்றுள்ள குறிப்பில் அப்படி இல்லை. மாறாக கடந்த 3 மாதங்களில் மட்டும் 12,91,00,000 மதிப்புள்ள துணிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பெற்றிருக்கிறது என்றும் இது வழக்கத்தை விட அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

இலவசமாக அரிசி வழங்கல்

*வினா எண் 280— **திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவித்தொகை பெறும் வயோதிகர்கள், ஊனமுற்றோர்கள் கைம்பெண்கள் ஆகியவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி அரசு இனாமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) அரசு உதவித் தொகை பெறும் முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகிய அனைவரும் இத்திட்டத்தின் கீழ் 1–11–1980 முதல் வாரம் ஒரு கிலோ உயர்ரக அரிசியை இலவசமாகப் பெறுகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கொடுக்கப்பெறும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதனை கூடுதலாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பார்த்துத் தான் அரசு அதனை ஆலோசனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 25 ரூபாய் என்று அவர்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்யப்பெற்றுள்ளது. அது ஒரு கிலோ அரிசி 1 ரூபாய் விற்ற காலத்தில் நிர்ணயம் செய்யப்பெற்ற தொகை, இன்றைக்கு 1 கிலோ அரிசியின் விலை 4 ரூபாயாக மாறிவிட்டது. நமது அண்டை மாநிலமான கேரளாவில் 50 ரூபாய் என்று உதவி கொடுக்கிறது. எனவே நம்முடைய தமிழக அரசு ஒரு முன் உதாரணமாக 100 ரூபாயாக அதை மாற்றி, குறைந்த பட்சம் வாரம் 10 கிலோ அரிசியாகவும் கொடுக்க ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த வருடம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையினால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைப் பார்த்து அரசின் நிதிநிலையையும் பொறுத்து, நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒழுங்குப் பிரச்சினை.

கண்டனத் தீர்மானத்தின் மீது கட்சித் தலைவர்களைப் பேச அனுமதிப்பது

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அன்று அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கு குறித்து திரு. உமாநாத் அவர்கள் ஒரு பிரேரணை கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் யாரையும் கூப்பிடாதது மட்டும் அல்ல. நாங்கள்